www.tamilarangam.net

# ஈழப்போராட்ட முன்னோடி சபாலிங்கம்
# பாரிசில் படுகொலை

இதுவரை காலமும் எழுத்துக்கும் இன்னொரு அரசியல் நிலைப்பாட்டுக்கும் எதிராக இலங்கையில் அரசியற் படுகொலைகளை நடத்திய அதே முகங்கள் அமிர்தலிங்கம் , யோகேஸ்வரன் , ராஜனி திராணகம, என்று தொடரும் முடிவில்லாத வரிசையில் பாரிசில் சபாலிங்கத்தையும் தங்கள் வெறிக்கு இரையாக்கியுள்ளனர்.
மே மாதம் முதலாம் திகதி பிற்பகல் 1 மணியளவில் துப்பாக்கி சகிதம் அவரது வீட்டுக்குள் நுழைந்த இரண்டு தமிழர்கள் மனைவி குழந்தை முன்னால் சபாலிங்கத்தின் மீது பல துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த பின் தொலைபேசி மற்றும் சகல தொடர்புகளையும் நாசஞ் செய்து குடும்பத்தினரையும் எச்சரித்துத் தலைமறைவாகி விட்டனர்.

ஈழவிடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான சபாலிங்கம் (14.01.1952–01.05.1994) இன்று எஞ்சியிருந்த ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராவர்.
1970 களில் பயங்கரவாதிகள் என்ற போர்வையில் சிறிலங்கா இனவாத அரசு விடுதலையை முன்னெடுத்த தமிழ் இளைஞர்களை கைது செய்த வேளையில் சபாலிங்கம் பாலமொன்றுக்கு குண்டு வைத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு வருடங்கள்(1973–1975)சிறையில் இடப்பட்டார். மாடிச்சிறையில் இருந்து தப்பிஓடும் போது நாரியில் முறிவேற்பட்டு ஐந்து வருடங்கள் சிறிலங்கா அரசின் தேடுதல் வேட்டைக்குத் தலைமறைவாக ஈழத்தில் வாழ்ந்து அதன் பின்னர் பிரான்சு வந்து சேர்ந்தார்.
தமிழ்ச் சமூகத்தின் கடந்த கால ஈழப்போராட்டமாயினும் சரி இன்றைய இடம்பெயர்ந்த தமிழர் வாழ்வாயினும் சரி அனைத்தினதும் ஆவணப்படுத்தலின் தேவையை உணர்ந்து கொண்ட சபாலிங்கம் நிகழ்வுகளை தன்னால் முடிந்த அளவு கோவைப்படுத்தி வந்திருக்கின்றார்.
ஆசியா (ASSEAY-ஈழம் கலைகள் சமூகவிஞ்ஞானக்கழகம்) எனும் இடம்பெயர்ந்த தமிழர்களின் வெளியீட்டு நிறுவனத்தின் இயக்குனராகவிருந்து சமகாலக் கவிஞர்களான ஜெயபாலன், சேரன், அருந்ததி, செல்வம், சோலைக்கிளி ஆகிய கவிஞர்களின் கவிதைகளையும் தாரகி அவர்களின் ஈழவிடுதலைப்போராட்டம் பற்றிய பத்தி எழுத்துக்களை "The Eluding Peace" எனும் பெயரிலும் வெளியிட்டுள்ளார். மேலும் "புத்தளம் வரலாறும் மரபுகளும்" என்ற நூல் வெளிவர உதவியும் மற்றும் இயக்க உட்படுகொலைகளைச் சித்தரிக்கும் "புதியதோர் உலகம்", 1958 ல் தமிழர்கள் மீதான இனப்படுகொலையை கண்டித்து தார்சி வித்தாச்சி அவர்கள் எழுதிய இலங்கையில் தடைசெய்யப்பட்ட "Emergency '58", யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் வரலாறு போன்ற நூல்களை மறுபிரசுரம்செய்துமுள்ளார்.
இலங்கையில் மனித உரிமை மீறல்கள் பற்றிய யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் அறிக்கைகளை பிரெஞ்சு மொழியில் வெளிக்கொணர்ந்ததுடன் புகலிடத்தில் தமிழர்களின் அரசியல் இலக்கியச் செயற்பாடுகளில் தன்னை முடிந்தவரை ஈடுபடுத்திக்கொண்டார்.

**தனிமனிதப் படுகொலைகளாலேயே ஈழவிடுதலைப்போராட்டம் சர்வதேசமெங்கும் நலிந்துகொண்டிருக்கும் இந்த வேளையில் சபாலிங்கத்தைப் படுகொலை செய்தமை ஈழத்தில் தமிழர்கள்மேல் நடாத்தப்படும் கொடூரமான தாக்குதல்களை அகில உலக ரீதியில் வெளிப்படுத்துவது மேலும் சிக்கலாகியுள்ளது.** இக் கொலையில் தாங்கள் இலாபமடையக்கூடும் என்று நினைப்போர் அரசியலை என்னவென்பது?!! ஈழத்தில் மட்டுமன்றி இன்று ஐரோப்பாவிலும் கூட தமிழரை அச்சுறுத்தும் இக் காட்டுமிராண்டித்தனமான கொலை, மாற்றுக்கருத்துக்களை செவிமடுக்கும் தாற்பரியம் தமிழர்களிடமிருந்து எட்ட எட்டப் போவதை மீண்டும் எமக்குக்காட்டி நிற்கிறது.

சிறு பொறிகளைக்கூட கண்டு அஞ்சும் கோழைகளே
கொலைகளை நிறுத்துங்கள்!
மௌனங்கள் பேசும் நாளொன்று தோன்றும்!

சபாலிங்கம் அஞ்சலிக் குழு நண்பர்கள்
03.05.94

www.tamilarangam.net

# இதய அஞ்சலி



மலர்வு

14
.
01
.
1952

உதிர்வு

01
.
05
.
1994

மக்களுக்காக வாழ்ந்த மாமனிதன்

## வேலணையூர் சபாரெத்தினம் சபாலிங்கம்

அவர்கள் 01. 05. 1994 அன்று அகால மரணமடைந்தார்.

1970 களில் தமிழ் பேசும் மக்கள் மீதான ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைக்கெதிராக யதார்த்த மான போராட்டத்தை முன்னெடுத்த மாணவர் பேரவையின் ஸ்தாபகர்களில் ஒருவர்.

அரசுக்கெதிரான வன்மையான போராட்டங்களை முன்னின்று நடாத்திய புத்திஜீவி என்ற காரணத்தினால் 1973 ல் இரகசிய பொலிசாரால் கைது செய்யப்பட்டு கொடூரமான சித்திரவதை களை அனுபவித்தவர்.

யாழ்ப்பாணம் / போகம்பரை(கண்டி) / வெலிக்கடை / அநுராதபுரம் ஆகிய சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு கொடுமைப்படுத்தப் பட்டவர்.

தனது வாழ்வின் இறுதி நிமிடம்வரை பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய தமிழ் பேசும் மக்களது வளர்ச்சிப் பணிகளுக்காக தனது ஆற்றலையும், அறிவினையும் அர்ப்பணித்து வந்தவர்.

இத்தகைய உயரிய மாமனிதனின் இழப்பு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

இவரது பிரிவால் ஆறாத துயரத்தால் பரிதவிக்கும் குடும்பத்தாருடனும் குறிப்பாக தந்தையைப் பறிகொடுத்துத் தவிக்கும் பாலகன் (சேயோன்) ஆகியோருடனும் இணைந்து நாம் எமது ஆழ்ந்த அநுதாபத்தை வெளிப்படுத்துவதுடன் அந்த மாமனிதனின் ஆத்மா சாந்தி பெற எமது இதய அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

**இதய நண்பர்கள்.**
**பிரான்ஸ்.**

www.tamilarangam.net

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
14 – 01 – 1952



மறைவு
01 – 05 – 1994

## அமரர் சபாரட்ணம் சபாலிங்கம்

பழகுவதற்கினிய நல்ல நண்பனாய், ஒரு சகோதரனாய், தோழனாய் நேற்றுவரையும் எங்களோடு இருந்து உதவிகள் பல புரிந்து பலர் பயனுற ஊடகமாயிருந்த அருமை நண்பர் திரு. சபாரட்ணம் சபாலிங்கம் அவர்களை ஒரு துப்பாக்கி பலியெடுத்துவிட்டது.

துயரத்தால் எங்களிதயம் கனத்தது, நடக்க முடியாதிருந்தது, இதயத்தைக் கழற்றி வைத்துவிட்டு நடக்கின்றோம். வேதனை தாழாது கலங்கி அழுது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு கண்ணீரைக் காணிக்கையாக்கி அவர்தம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கோவிலும் தெய்வமும் சண்டை செய்யும், தெய்வத்தின் துப்பாக்கிக்கு கோயில் பலியாகும், குருக்கள் கோயிலைக் கொண்டுபோய் தீர்த்தக் குளத்தில் போட்டு தகனம் செய்து விட்டு தெய்வத்தின் வாய்க்குள் குதித்து தற்கொலை செய்துகொள்வார். மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் விழுங்கிக் கொள்வார்கள். மரணித்த மனித ஆத்மாக்களுக்கு புகலிடம் கொடுப்பது பற்றி மரங்கள் கூடி மகாநாடு நடத்தும். இந்த யுக பிரதேசத்திற்கான பிரவேசமாக இக் கொலை அமைவதையிட்டு வருந்துகிறோம்.

06. 05. 1994

பிரான்ஸ் வாழ் வேலணை நண்பர்கள்

www.tamilarangam.net



ஓசை

# எஸ். சபாலிங்கம்

* தமிழ் மாணவர் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர்.

* ஈழப் போராட்டத்தின் முதற்குரலாக வெளிவந்த "காவலன்" பத்திரிகையின் ஆசிரியர்களுள் ஒருவர்.

* தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பங்கெடுத்ததின் காரணமாக சிறைக்கொடுமைகளை அனுபவித்தவர்.

* பிரான்ஸிற்கு அகதியாக இடம்பெயர்ந்த பின்னரும் சமூகப்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.

* பிரான்ஸில் முதற்தமிழ் சஞ்சிகையின் தோற்றத்திற்கான முன்னோடி.

* தலைசிறந்த ஆவணச் சேகரிப்பாளர்.

* இறக்கும்வரை மனிதஉரிமை மீறல்களுக்கெதிரான அமைப்புகளுடன் தொடர்புகளை வளர்த்து வந்ததுடன் அதற்கெதிராக தீவிரமாக உழைத்தும் வந்தவர்.

* காலத்தின் தேவையை அறிந்து, பிரான்ஸில், "ஆசிய வெளியீட்டு நிறுவன"த்தை நிறுவி அதனூடாக புதையுண்டு கிடந்த வரலாறுகளை வெளிக்கொணர முயற்சித்ததோடு ஈழத்துப்படைப்பாளிகளை ஊக்குவித்தும் வந்தவர்.
போர்க்கால புகலிட இலக்கிய வளர்ச்சிக்கு உரமூட்ட முனைந்தவர்.

* இந்த வகையில், பொருளாதார நெருக்கடிக்குள் தத்தளித்துக்கொண்டிருந்த "ஓசை"க்கு கைகொடுக்க ஓடோடிவந்த நண்பன்.

"ஓசை" காலாண்டிதழ் இடைவெளி அதிகம் - மாதஇதழாக வேண்டுமென்று அவாவோடும், துடிப்போடும் செயலாற்றி வந்தவர்.....

* பெருகிவந்த எழுத்தாளர் தொடர்புகள் - வேண்டுகோள்களுக்கிணங்க, இந்த ஆண்டு முடிவதற்குள் ஆறு நூல்களாவது "ஆசியா"வுக்கூடாக வெளியிட்டு தமிழ்உலகிற்கு தன்னால் முடிந்தளவு பங்களிப்பை ஆற்ற, பேரவாவோடு திட்டமிட்டு வேகமாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தவர்.

இன்று ...?

தோற்றம் : 14. 01. 1952
மறைவு : 01. 05. 1994

எல்லாமே சூன்யமாகி ஸ்தம்பித்துப்போன நிலையில் "ஓசை" தனது இறுதி அஞ்சலியை கண்ணீருடன் சமர்ப்பிக்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பாரிஸில் ரெலோ முக்கியஸ்தர் சுட்டுக் கொலை

தமிழீழவிடுதலை இயக்கங்களின் முன்னோடிகளில் ஒருவரும், ஸ்ரீலங்கா சிறைச்சாலை முகாமாக [illegible] மாதத்தில் இருந்து வெளியில் [illegible] தப்பி வெளியேறியவருமாகிய எஸ்.சபா[illegible]ம் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் ரெலோ இயக்கத்தின் நிறுவுநர்களில் ஒருவர் மட்டுமல்ல "ஆசிய வெளியீட்டு நிறுவனம்" என்ற பெயரில் அமைப்பு ஒன்றை நடத்தி வருவதுடன் தீவிரமாக விடுதலைப்புலிகளை விமர்சித்து வருபவர். சர்ச்சைக்குரிய நூல்களை வெளியிடுவதும் இயக்கச் சந்திப்பு என்ற போர்வையில் புலி எதிர்ப்பு நடத்துவதையுமே இவர் தனது பிரதான தொழிலாகக் கொண்டிருந்ததுடன் (மூன்றாம் பக்கம் பார்க்க)

ம் [illegible] ஈழநாடு

முதலாம் பக்கத் தொடர்ச்சி.....

## பாரிஸில் ரெலோ முக்கியஸ்தர்

புதிதாக பாரிசுக்கு வருபவர்களுக்கு அகதி வழக்குகளை எழுதிக் கொடுக்கும் தொழிலையும் மேற்கொண்டு வந்தார்.

சம்பவ தினத்தன்று இரண்டு வாலிபர்கள் அகதி வழக்கு சம்பவமாக வருவதாகக் கூறி வீட்டிற்குள் நுழைந்து அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டு தப்பி ஓடியுள்ளனர். சம்பவம் நடக்கும் போது அவரது மகளும் உடனிருந்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற மேதினக்கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப்புலிகளின் பேச்சாளர் திலகர் வன்மையாகக் கண்டித்ததுடன் இச்சம்பவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று மறுத்துரைத்தார். புலி எதிர்ப்பாளர்களால் இக்கொலையை புலிகளே செய்தனர் என பிரசாரம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net

# இறுதிக் கிரியைகள் பற்றிய அறிவிப்பு

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 14 – 01 – 1952 |  | 01 – 05 – 1994 |

## சபாரட்ணம் சபாலிங்கம்

வேலணையை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. சபாரட்ணம் சபாலிங்கம் அவர்கள் 01. 05. 1994 ஞாயிற்றுக் கிழமை அன்று சார்செலில் ( Sarcelles ) அகால மரணமடைந்தார். அன்னாரது பூதவுடல் எதிர் வரும் புதன் கிழமை 11. 05. 1994 அன்று பிற்பகல் 02 மணியிலிருந்து பொதுமக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 03:15 மணிக்கு தகனம் செய்யப்படும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

பொது அஞ்சலியும் தகனக் கிரிகைகளும் நடைபெறும் முகவரி:

**CREMATORIUM DES JONCHEROLLES**
95, RUE MARCEL SEMBAT
93430 VILLETANEUSE

மனைவி, மகன்
உறவினர்கள், நண்பர்கள்

மேலதிக விபரங்களுக்கு:
தொ.பே.: 39 90 89 70
தொ.பே.: 39 86 31 30

இறுதிக் கிரியை நடைபெறும் இடத்திற்கு
[illegible] பாதையின் வரைபடம் பின்பக்கத்தில்........

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




இறுதிக் கிரிகைகள் நடைபெறும் இடம்

**Le PRESIDENT du SYNDICAT INTERCOMMUNAL du CIMETIERE des JONCHEROLLES**
vous informe qu'après de nombreuses démarches effectuées auprès de la R.A.T.P. depuis 1976 pour la DESSERTE DU CIMETIERE par les transports en commun, une antenne de la ligne du 168 a été mise en place en empruntant successivement

l'itinéraire du 168 jusqu'à la Mairie de Pierrefitte
l'itinéraire du 150 jusqu'à Villetaneuse Edouard-Vaillant
l'itinéraire du 256 jusqu'à l'arrêt Villetaneuse-Camot
puis la rue Marcel Sembat jusqu'au Cimetière Intercommunal.

Un service aller-retour fonctionnera le VENDREDI, le SAMEDI ainsi que la veille et le jour des Rameaux et Toussaint.
et mercredi
Départ SAINT DENIS (porte de Paris) pour VILLETANEUSE (Cimetière) : **14 h 15**
Départ VILLETANEUSE (cimetière) pour SAINT DENIS (Porte de Paris) : **15 h 45**

Indication de l'itinéraire suivi ci-dessous :




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒன்றுபடுவோம். ஓரணி திரள்வோம். கொலைக் கலாச்சாரத்தை முளையிலேயே கிள்ளியெறிவோம்.

நாம் பிறந்த மண்ணில் சுதந்திரம் கேட்டதால் உற்றுரைப் பறிகொடுத்து, வீடிழந்து, நாடிழந்து அந்நிய மண்ணில் அடைக்கலம் புகுந்து அகதிகளாக வாழும் அன்பார்ந்த தமிழ்மக்களே,

திரு.சபாரத்தினம் சபாலிங்கம் எனப்படும் எமது ஆருயிர் நண்பன், தனது சொந்த வீட்டுக்குள்ளேயே, மனைவி, மகன், உறவினர்கள் முன்னிலையில், பட்டப்பகலில், உதவி வேண்டும் என்கிற போர்வையில் உட்புகுந்த இரு கொலைகாரக் கும்பலினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளான்.

யார் இந்த சபாலிங்கம்? ஏன் இந்தப் படுகொலை? கொலைஞர்கள் யார்? என்று தட்டிக் கேட்கப் போகிறோமா? அல்லது நமக்கேன் வீண் வம்பு என வாய்மூடி மௌனித்திருப்போமா?

1970களிலே, மாணவப் பருவத்திலேயே மக்களைப் பற்றிச் சிந்தித்துத் தமிழ் மாணவர் பேரவையைக் கட்டியெழுப்பியவர்களில் இவனும் ஒருவன். ஆட்சியாளர்களுக்கெதிராகப் பேசவே பயந்த அன்றைய நாட்களில் கிராமங்கள், பாடசாலைகள், காடுகள், குடியேற்றப் பண்ணைகள் தோறும் கால்நடையாகவும், சைக்கிளிலும் அலைந்து திரிந்து மாணவர்களை, இளைஞர்களை, தமிழ் மக்களை விடுதலைப் போருக்கென அணி திரட்டியவன். அரசுப் பணியில் இருந்தபோதும் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தவன். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு அரிச்சுவடியைக் கற்றுத் தந்தவன். இதனால் சிறிலங்கா சிறைகளிலே பல வருடங்கள் சித்திரைவதைகளை அனுபவித்தவன். சிறையிலிருந்து தப்பியோடும் முயற்சியிலே தனது இடுப்பையே முறித்துக்கொண்டவன். அரசு மறுபடி அவனுக்காக வலைவிரித்தபோது எம்மைப்போல் அவனும் இந்த நாட்டில் வந்து தஞ்சம் புகுந்து அகதியானவன்.

அகதியான நிலையிலும் அவன் தனது நாட்டு மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமையை மறக்கவில்லை. இன்று திசைமாறி, இலக்கு இழந்து இன அழிவை வேகப்படுத்திக் கொண்டிருக்கும் ஈழவிடுதலைப் போராட்டம் விரைவில் சரியான திசையறிந்து உண்மையான இலக்கு நோக்கி முன்னேறும் என்ற நம்பிக்கையுடனும், முன்னேறவேண்டும் என்ற வேட்கையுடனும் விடாமுயற்சியுடன் செயற்பட்டவன். அதற்கான பயணத்தில் சரி எது? பிழை எது? உண்மை என்ன? பொய் என்ன? நீதியா? அநீதியா? என்பவை மக்கள் மத்தியில் விவாதிக்கப்படல் வேண்டும் என்பதும், வருங்காலப் போராட்ட சந்ததிகளுக்காக அவைகள் யாவும் வரலாற்றுப் பதிவுகளாக அமையவேண்டும் என்பதும் இவனது குறிக்கோளாக இருந்தது. அதேவேளை எமது உரிமைகளுக்காகப் போராடும் நாம் மனித உரிமைகளையும் பாதுகாக்கவேண்டும் என்பதிலும் அவன் குறியாகவே இருந்தான். இவனது இந்த முயற்சியின் பயனாக இன்று ஒரு சிறந்த ஆவணக் காப்பகத்தையே எமக்கு உருவாக்கித் தந்துவிட்டுச் சென்றுள்ளான் எமது இனிய நண்பன் சபாலிங்கம்.

சரியாகச் சிந்திக்கத் தெரியாத, உண்மையைக் காணப் பயந்த, நீதியைச் சந்திக்கத் திராணியற்ற படுகோழைகளே இந்தக் கொலைகாரக் கூட்டம். உண்மையைக் வெட்டிக் குழிதோண்டிப் புதைக்கும், நீதியைக் கழுத்தைத் திருகிக் கொல்லும் முயற்சியின் விளைவுதான் இந்தப் போராளி சபாலிங்கத்தின் பச்சைப் படுகொலை.

www.tamilarangam.net

ஈழத்தில் 1980ஆரம்பங்களில் இடம்பெற்று வந்த தனிமனித விருப்பு வெறுப்புக் கொலைகளை மக்கள் நாம் கண்டும் காணாதவர்களாய் மௌனித்து இருந்ததனாலேயே ஈழப்போராட்டம் இன்றைய அழிவு நிலைக்குத் தள்ளப்பட்டது. அன்று மக்கள் நாம் தட்டிக் கேட்டிருந்தால் இன்று ஆயிரக் கணக்கில் எமதருமைப் புதல்வர்களை, நண்பர்களை, உறவினர்களை, கல்விமான்களை, திறமைசாலிகளை அநியாயமாக இழந்திருக்கமாட்டோம். அன்று நாமனைவரும் ஓரணி திரண்டு ஒற்றுமைக் குரல் எழுப்பியிருந்தால் இன்று எமது தாயகமண்ணில் முக்கால்வாசியைப் பறிகொடுத்துவிட்டு சொந்த ஊருக்குள்ளேயே மக்களை அகதிமுகாம்களுக்குள் தவிக்கவிட்டுவிட்டு குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டிக் கொண்டிருக்க மாட்டோம். சொந்த மண்ணில் கொலைப் பயம் என்றே இந்த அந்நிய மண்ணில் அகதிகளானோம். இங்கும் அந்தக் கொலைக்கரம் நீண்டால் மக்கள் நாம் இனி ஓடுவதெங்கே?

மக்களின் உயிருக்கு உத்தரவாதம் கொடுத்து, அவர்தம் உரிமைக்கு மதிப்பளித்து, அவர்கள் உடைமைகளை பாதுகாத்து, மக்கள் தாம் வாழ்ந்த பாரம்பரியப் பிரதேசங்களைத் தக்கவைத்து, முன்னேறவேண்டிய ஈழப் போராட்டம் அதற்கு மாறாக இன்று, மக்களைப் பணயக்கைதிகளாக ஆக்கி அனைத்தையும் இழக்கவைத்து, எந்நேரமும் எதுவும் நடக்கலாம், நாட்டைவிட்டு எப்படித் தப்பி ஓடலாம் என்ற மனோ நிலைக்கு அவர்களைத் தள்ளிவிட்டுள்ளது. எமது நாட்டில் இந்நிலை நீடிக்க இங்கிருக்கும் நாம் உடந்தையாக இருக்கக்கூடாது. எமது மண்ணின் இன்றைய பச்சைப் படுகொலைப் பண்பாடு இங்கேயும் தொடர அனுமதிக்கமுடியாது.

**இதனைச் சாதிக்கும் சக்தி மக்களாகிய உங்களிடமே உண்டு. மக்கள் சக்தி மாபெரும் சக்தி.**
**மக்கள் சேர்ந்தால் மலையையும் நகர்த்தலாம்.**
**மக்களே தூங்கியது போதும். இல்லையெனில்**
**இக்கொலைப் பட்டியல் தொடரவே செய்யும்.**

**மக்களே மௌனித்திருந்தது போதும். இல்லையெனில்**
**இங்கேயும் நாம் எம்மை, எமது நண்பர்களை, எமது மக்களில் பலரை இழக்கவேண்டியேற்படும்.**

**எனக்கென்ன வந்தது என்ற மனோநிலை போதும். இல்லையெனில் இந்நாட்டு மக்களால் நாம் வெறுக்கப்பட்டு விரட்டப்படும் காலம் வெகு விரைவில் வரும்.**

**இப்போதே விழித்தெழுங்கள். இந்தப் படுகொலைக் கும்பலை இனம் காணுங்கள்.**
**கொலைக் கலாச்சாரத்தை வேரோடு புடுங்கி எறியுங்கள்.**

சிந்திப்போம். தீர்மானிப்போம். செயற்படுவோம்.
ஒன்றுபடுவோம். ஒழுங்கமைப்போம். ஓரணிதிரள்வோம்.

***சபாலிங்கம் நண்பர்கள் வட்டம்.***
***பாரீஸ், பிரான்ஸ்.*** **04.05.1994**